# Vetanayakampillaiyin Pataippukalil Penniyam

**Dr. V. Reka**
*Assistant professor, Department of Tamil*
*Karpagam University, Coimbatore*

**Abstract**

*For society to prosper and achieve equality, the status of women's lives must be on par with that of men. The quality of a society, whether it rises or falls, depends on the status of the women living in it. Society is a structure woven from networks of relationships. Among these, gender-based relationships between men and women are constant. In this, women are seen serving family relationships and improving their educational status. It is understood that Vedanayagam has recorded feminist issues in his works.*

***Keywords :*** *Society, Feminism, Economy, Hospitality, Education, Morality.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358435

**References**

1. Devadatta, Feminism - A Historical Perspective, Valluvar Pathippagam, Palayamkottai, 2001.
2. Prema. Ra, Feminist Approaches, New Century Book House, Chennai, 1999.
3. Sarala Rajagopalan, Tamilttendralum Penniyamum, Pari Nilayam, Chennai, 2010.
4. K.K. Pillai, History of Tamil Nadu and Culture of its People, International Institute of Tamil Studies, Tharamani, Chennai, 1998.
5. Maruthanayagam, P. Thirukkural: Text and Research Commentary, Central Institute of Classical Tamil, 2024.
6. Vedanayagam Pillai's Works, Kaveri Pathippagam, Chennai, 2007.

# வேதநாயகம்பிள்ளையின் படைப்புகளில் பெண்ணியம்

***முனைவர் வே. ரேகா***
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்க்கல்விக் கழகம், கோயம்புத்தூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*சமுதாயம் மேன்மையடைய சமுதாயம் சமத்துவ நிலை பெற ஆடவர்களுக்கு இணையான நிலையில் பெண்களின் வாழ்க்கை நிலையும் அமைதல் வேண்டும். ஒரு சமுதாயத்தின் தரம் உயர்வடைவதும் தாழ்வடைவதும் அச்சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்களின் நிலையைப் பொறுத்தும் அமைகின்றது. சமுதாயம் என்பது உறவுமுறைகளாகிய வலைகளால் பின்னப்பட்ட அமைப்பு ஆகும். இவற்றில் பால் அடிப்படையில் ஆண்-பெண் என்ற உறவுமுறைகள் நிலையானதாகக் காணப்படுகின்றன. இதில் குடும்ப உறவுகளுக்கு பணிவிடை செய்தும் தன் கல்வி நிலையை உயர்த்திக் கொள்வதுமாக பெண் காணப்படுகிறாள். இங்ஙனம் வேதநாயகம் தம் படைப்புகளில் பெண்ணியம் சார்ந்த பிரச்சனைகளைப் பதிவு செய்திருப்பது அறியப்படுகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *சமுதாயம், பெண்ணியம், பொருளாதாரம், விருந்தோம்பல், உபசரித்தல், கல்வி, நன்னெறி*

**முன்னுரை**

பெண்களின் சமுதாய நிலையானது சங்க காலத்தில் உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தது. சங்க காலத்திற்குப் பின்னர் தாழ்ந்த நிலையை அடைந்தது. பக்தி இயக்க காலத்தில் அருளாளர்களின் ஆதரவும் கிடைக்க பெற்று பெண்களின் நிலை ஏற்றம் கொடுத்தமையால் பெண்கள் பல நிலைகளில் வளர்ச்சி அடைந்து வந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இறுதியல் சுட்டத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. சமுதாயச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றிப் பெண்கள் நிலை மேம்பாடடைய அரும் பணிகள் மேற்கொண்டன. இலக்கியப் படைப்பாளர்கள் பலர் பெண்களின் வாழ்க்கை மேம்பாட்டுச் சிந்தனைகள் பலவற்றைத் தம் படைப்புகளில் வெளிப்படுத்தினர். அத்தகையோருள் வேதநாயகம் பிள்ளையின் பங்கும் குறிப்பிடத்தக்கது. வேதநாயகம் பிள்ளையின் படைப்புகளில் சமுதாயத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தன என்பது பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

**பெண்ணியம் - விளக்கம்**

பாலினப் பாகுபாடு (Sex Discrimination) தொடர்பான சமூகப் பண்பாட்டு வேர்களை இனம் கண்டுகொள்ளவும், குறிப்பாக பெண்களுக்கு எதிரான அடக்குமுறை, சுரண்டல் முறைகளை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் தெளிவான வரையறையை முன்வைக்கிறது. இது பெண்களுக்கு எதிராகக் குடும்ப - சமூக நிறுவனங்களில் அரசியலாகி (folitbcs) வரும் ஆண் அதிகாரத்தை (Power) ஆளுகையை, (Domination) எதிர்த்துச் செயல்படும் உணர்வு நிலையைச் சுட்டியும் நிற்கிறது.

இதற்கு, சமூகத்திலும், வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும், பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம் (தேவதத்தா, பெண்ணியம் ஒரு வரலாற்றுப் பார்வை, ப.89) என்ற பகுதி சான்றாக அமைகிறது.

பெண்ணியத்தை வளர்த்தெடுத்த, பெண் விடுதலையை மையமாகக் கொண்ட சிந்தனையாளர்களையும், பெண்ணியவாதிகளையும், அவர்களால் ஏற்படுத்தப்படட இயக்கங்களையும் முதலில் அறிந்து கொள்வது தேவையாகிறது.

சாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி இன்றைய நடைமுறை வாழ்விலும், குடும்ப அளவிலும், சமுதாய நிலையிலுமாகப் பெண்கள் சந்தித்து வருகின்ற பிரச்சினைகளைப் பெண்களின் வளர்ச்சிக்கான தடைகள் எனலாம். இன்றைய வாழ்க்கைச் சூழலில் பெண்கள் எதையும், எவரையும் ஆராய்ந்து பார்த்தே முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய சூழலில் உள்ளனர். (இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப.122) வேதநாயகம் பிள்ளையின் படைப்புகளில் இப்பிரச்சினைகளைக் காணலாம்.

### வீட்டு வேலைகளைக் கவனித்தல்

பெண்ணை வீட்டு வேலைகளைச் செய்யும் மனித இயந்திரமாகவே ஆண்கள் நினைக்கின்றனர். பலர் பலநாள் செய்ய வேண்டிய செயல்களை ஒருத்தியே ஒரு நாளில் செய்கிறாள். பெண்கள் சமையலறையில் தன் ஆட்சியைச் செலுத்தி உரிமையை நிலைநாட்டுவதாக எண்ணுகின்றனர். இதனைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வது ஆண் அரசியல் சாகசமாகும். பெண்கள் வீட்டு நிர்வாகம் மற்றும் சாவிக்கொத்து தனக்கு கிடைத்தால் சகல உரிமையும் தன்னை அடைந்ததாகப் பெருமை கொண்டு அடுத்த நிலைக்கு எத்தனிப்பதில்லை.

வேலைப் பங்கீட்டின்படி ஆடவர்கள் வீட்டுக்கு வெளியேயுள்ள வேலைகளையும் பெண்கள் வீட்டுக்குள்ளேயுள்ள வேலைகளையும் செய்தல் என்பது பொதுவான சமூக மரபாயுள்ளது. இந்நிலையை வேதநாயகம் பிள்ளை சுட்டுகின்றார். பிரதாப முதலியாரின் தாய் சுந்தரத்தண்ணி வீட்டுக்கிரம காரியங்களைக் கவனிப்பதாய்க் கூறுகின்றார்.

**மேன்மைத் துரை மகளானாலும் வீட்டு**

வேலைக்குப் பின்னிட்டுச் சோராள் (வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.3) எத்தகைய செல்வ வளமுள்ள பெண்ணும் வீட்டு வேலைகளைக் கவனிப்பதைக் குறிப்பிடுகிறார். வீட்டு வேலைகள் அனைத்தும் நிறைவுற்ற பின்னரே பெண்கள் தூங்கச் செல்கிறார்கள் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

### வீட்டுக் கணக்கெழுதுதல்

குடும்பப் பொருளாதார முன்னேற்றம் பெண்களின் கைகளிலேயே உள்ளது. எவ்வளவு வருமானம் கணவன்-ஆடவன் ஈட்டினாலும் மனைவி-பெண் அளவில்லாமல் செலவு செய்தால் அக்குடும்பம் முன்னேற முடியாது.

**வரவு செலவு கணக்கெழுதி வைப்போம்**
**காரியம் பார்ப்பவள் கணக்கெழுதுபவள்**
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.8)***

என்ற அடிகள் பெண்கள் கணக்கெழுதும் திறன் படைத்தவர்கள் என்பதைக் காட்டுகின்றன.

### சேமிக்கும் திறன் பெறுதல்

ஒரு குடும்பத்தில் ஆடவர் எவ்வளவுதான் பொருள் ஈட்டினாலும் அப்பொருளைத் தேவையறிந்து செலவு செய்தால் மட்டுமே சேமிக்க முடியும். இன்றைய வருமானத்தில் நாளைய தேவைக்குரிய சேமிப்பைச் செய்ய வேண்டும். இதனால் தான் வள்ளுவர்,

**ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை(குறள்.408)**

என்றார். பெண்கள் சேமிக்கும் திறன் பெற்றவர்கள் என்பதை,

***சிந்தாமல் மங்காமல் வீட்டுப்பொருள்களைச்***
***சீவன்போல் காக்கும் நிர்வாகி-நிதம்***
***செலவைக் குறைத்து வரும்படியில் மிச்சம்***
***சேர்த்து வைக்கும் மதியூகி***
***(வேதநாயகம் பிள்ளை, சர்வசமய சமரசக் கீர்த்தனைகள், ப.182:5:1-4)***

எனப் புகழ்கின்றார்.

**தையல் வேலை செய்தல்**

வீட்டு வேலைகள் முடிந்த பின்பு பெண்கள் வீணாகப் பொழுதைக் போக்காமல் ஆக்க வேலைகளில் ஈடுபட்டால் பொழுதும் நன்முறையில் கழிவதுடன், குடும்பப் பொருளாதாரமும் மேன்மையுறும். இவ்வகையில் பெண்கள் ஈடுபட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் பாங்கினை,

***வகைவகை யுடுப்புகளுக்குத் தைப்போம்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.19)***

என உணர்த்துகின்றார்.

**புகுந்த வீட்டுப் பெருமையைக் காத்தல்**

ஆண்டிச்சியம்மாள், புருன் வீட்டில் நடக்கிற கொடுமைகளைத் தகப்பனுக்குத் தெரிவிப்பது பதிவிரதைகளுக்குத் தகுதி அல்லவென்றும் கலகத்துக்கு ஆஸ்பதம் ஆகுமென்றும் நினைத்து, நான் என்னுடைய வருத்தங்களையெல்லாம் என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதாமல் இருந்து விட்டேன் (வேதநாயகம் பிள்ளை, பிரதாப முதலியார் சரித்திரம், ப.104) என்று கூறுதல் பெண்களின் புகுந்த வீட்டுப் பெருமையைக் காக்கும் குணத்தை வெளிப்படுத்துகின்றது எனக் கருதலாம்.

**குடும்ப உறுப்பினர்களுக்காகத் துன்புறுதல்**

பெண்களுக்கு இயற்கையாயுள்ள மாதவிடாய், கற்பம், பிரசவம், பிள்ளை வளர்த்தல், பாகஞ் செய்தல், மாமன், மாமி முதலியோரை உபசரித்தல், விருந்தோம்பல் முதலிய கட்டங்களையும் துன்பங்களையும் சற்று நினைத்தால் மண்ணும் இரங்கும். மாலையும் உருகுமே (வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.10) என்ற வேதநாயகம் பிள்ளையின் கருத்து பெண்கள் இயற்கையாக இன்னல் அடையும் நேரங்களிலும் கூடத் தமக்குரிய துன்பங்களைப் பொருட்படுத்தாது குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாப்பதிலும் குடும்ப உறுப்பினர்களுக்குக்குரிய உணவைச் சமைப்பதிலும் கூடப் பல்வேறு துன்பங்களை அடைகின்றமையைக் காட்டுகின்றது.

**விருந்தினரை உபசரித்தல்**

குடும்பம் என்ற சமுதாய நிறுவனத்தின் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க பண்புகளுள் ஒன்று விருந்தினரை உபசரித்தல் ஆகும். இச்செயல் மூலம் குடும்ப உறவு வலுப்படும். இச்செயலில் பெண்களுக்கே அதிக பங்கு உள்ளது. இப்பண்பும் பெண்களிடத்தில் நிறைந்து காணப்படுதலை,

***ஓயா விருந்து வந்தாலுஞ் சலியாமல்***
***உண்ணச் சொல்வாள் அன்னங் கொட்டி***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.10)***

எனக் காட்டுகின்றார்.

***கணவன் புகழுக்காகப் பாடுபடல்***
***--------------- -------------------------***
***----- -----உத்தன்***
***பந்தமொன்றே கோடி லட்சமென்றெண்ணிப்***
***பலதுன்பம் வந்தாலும் ஏங்காள்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.22)***

எனப் பெண்கள் எத்துன்பம் வரினும் கணவன் உறவைப் பெரிதென மதித்து, அவன் பெருமைக்காக அத்துன்பததைத் தாங்கும் பொறுமை உள்ளம் கொண்டவள் என்கிறார்.

**கணவனுக்கு ஆறுதல் அளித்தல்**

மனைவி கணவனின் வாழ்க்கைத்துணை. கணவன் வீட்டுக்கு வெளியேயுள்ள வேலைகளைப் பார்க்கின்றான். எனவே, சமுதாயத்தில் பலருடன் பழகவேண்டிய இன்றியமையாமை உள்ளது. இதனால் பல பிரச்சனைகள் தோன்ற வாய்ப்புகளும் உள்ளன. எனவே, கணவன் வீட்டிற்குள் வரும் இந்நேரங்களில் பெண்கள் - மனைவி அவனுக்கு

ஆறுதல் கூறித் தேறுதல் அளிக்கும் சிறந்த துணையாகச் செயல்பாடுகின்றாள்.
இப்பண்பை,

***----------------- உமக்***
***கற்பவருத்தமில்லாமற் கவலைகள்***
***அத்தனையுந் தனையேற்பாள் (வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.14)***

என்ற அடிகளில் உணர்த்துகின்றார்.

**கணவரை நன்னெறியில் செலுத்தல்**

சில ஆடவர்-கணவர்-சூழ்நிலையின் காரணமாகத் தவறான வழியில் சென்றாலும், செல்ல முனைந்தாலும் பெண்கள்-மனைவி அவர்களைக் கடிந்துரைத்து நன்னெறியில் செலுத்தும் திறன்மிக்கவர்களாகத் திகழ்கின்றமையை,

***--------------- ------------------ உண்மை***
***உத்தம மார்க்கத்தில் சேர்ப்பாள்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.18)***

என்கின்றார்.

**கணவனுக்காகத் தொண்டுகள் செய்தல்**

கணவனின் குணத்தைப் போற்றும் பெண்கள் அவள் கண்பார்வை இழந்த நிலையில் கண்களாகவும்இ நடக்க இயலாத நிலையில் கால்களாகவும், நோய்வாய்ப்பட்ட நிலையில் மருத்துவச்சியாகவும் விளங்கித் தொண்டுகள் புரியும் தொண்டுள்ளம் கொண்டவர்கள் என்பதை,

***------------- ------------ ---------- நீர்***
***ஊமை குருடரானுலுங் செய்வாளுமக்***
***குரிமையாய் ராஜோபச்சாரம்***
***பாயும் படுக்கையு மாகநோய் கொண்டாலும்***
***பர்த்தா வேலைக்குப்பின் வாங்காள்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.29)***

என்ற அடிகள் மூலம் புலப்படுத்துகின்றார்.

**கணவருடன் இணைந்த வாழ்க்கை வாழ்தல்**

வாழ்க்கைத் துணை என்ற நிலையில் ஆடவர் இன்புறும்போது இன்புற்றும் துன்புறும்போது துன்புற்றும், பசியாறும்போது பசியாற்றியும் காணப்படுகின்றனர் என்பதை,

***நீர் மகிழ்ந்தால் அவள்தான் மகிழ்வாள் துன்பம்***
***நீர்கொள்ளில் அவட்குவிசாரம்***
***நீருண்ணில் பசி தீரும் இருவர்க்கும்***
***நிச்சயமேக சரீரம்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.31)***

எனக் கூறுகின்றார்.

**கணவன் கற்பைப் பேணுதல்**

மனைவி கற்புடையவளாய்த் திகழவேண்டும் என எண்ணும் சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்கள் தம் கணவரும் கற்புடன் வாழவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

***பரமாதருடன் சஞ்சாரம் - செயலில்***
***வரும வளுடைய நி; டூரம்-அதற்***
***கொரு நாளுமில்லைபரி காரம்***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.33)***

என்று பெண்களின் எதிர்பார்ப்பைப் புலப்படுத்துகிறார்.

**கணவனின் செல்வமாகத் திகழ்தல்**

பல்வேறு அரும்பண்புகள் வாய்க்கப்பெற்ற பெண்ணை ஒருவன் மனைவியாகப் பெற்றால் அதற்கு இணையான செல்வம் வேறு அவனுக்கு இல்லை என்பதை,

ஒருவனுக்கு உத்தம குணமுள்ள பாரி வாய்ப்பாளானால் அதற்குச் சமானமான செல்வம் வேறொன்றுமில்லை (வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.41) என உணர்த்துகின்றார்

***ஆடவர்களின் வாழ்க்கையாதல்***
***புருஷர்களுடைய வாழ்வுகளெல்லாம் பெண் ரூபமாகக் கிடைத்திருக்க,***
***புருஷர்களை பெண்களை அவமானப்படுத்து வது கிரமமா***
***(வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.52)***

என வினவிப் பெண்கள் பல நிலைகளில் ஆடவர்களின் வாழ்க்கைக்கு உறுதுணை புரியும் திறனை விளக்குகிறார். இத்தகைய பெருமைகள் நிறைந்த பெண்கள் ஆடவர்களின் கண்களாகத திகழ்கின்றமையை,

***உத்தமவான்களே! சத்தியமான்களே!***
***உங்களுக்குக் கண்ணான பெண்களாகு மெங்களுக்கு (வேதநாயகம் பிள்ளை, பெண் மதிமாலை, ப.46) என்ற பெண்கள் கூற்று மூலம் கூறுகின்றார்.***

**குடும்ப விளக்காகத் திகழ்தல்**

“நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்” என்று பாவேந்தர் கூறினார். குடும்பத்தில் இன்றியமையாப் பொறுப்புகளையும் சிறப்புகளையும் வகிக்கும் பெண்களை அவர் குடும்ப விளக்காகக் கண்டார். வேதநாயம் பிள்ளை அதற்கு முன்னரே பெண்கள் குடும்ப விளக்காக விளங்குகின்றமையை,

இராத்திரி காலங்களில் பிரகாசிக்கிற தீபங்கள் போல் சமுசாரமாகிய அந்த காரத்திற்கு ஸ்திரீகளே தீபங்களாயிருக்கிறார்கள் (பெண்மதி மாலை, புருஷர்களை வேண்டுதல்: அனுபல்லவி ப.14.) என்று குறிப்பிடுகின்றார்.

**கல்வியின் தேவை**

கல்வியானது சிறந்த செல்வமாகவும், மதிப்பாகவும், அழகாகவும், அணிகலனாகவும், வலிமையாகவும், சுகமாகவும், பாதுகாப்பாகவும், நினைத்தனவற்றையெல்லாம் தர வல்லதாகவும், கடவுளின் குணங்களையும், தரும நூல்களின் பொருள்களின், சாத்திரக் கருத்துக்களையும் உணர்த்துவதாகவும், கடவுளை அறிய, கடவுளைக் காண, கடவுளை உணர உதவுவதாகவும், மனம் பண்படத் துணையாகவும், அறிவை வளர்க்கும் கருவியாகவும், மனத்தைக் கட்டுப்படுத்து வதாகவும்இ நன்னெறியில் செலுத்துவதாகவும் அமைகின்றது.

வேதநாயகம் பிள்ளை வாழ்ந்த காலத்தில் கல்வியைப் பயிற்றுவிக்கத் திண்ணைப் பள்ளிகளே காணப்பட்டன என்றும் அவற்றில் பயிலும் வாய்ப்பு ஒரு சிலருக்கே கிடைத்தது என்றும் கருதலாம் (கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.498)

எனவே மகளிர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்த வேதநாயகம் பிள்ளை மகளிர் கல்வி குறித்தும் வலியுறுத்துகிறார். மேலும், பெண்களின் ஆற்றல்களில் நம்பிக்கை கொண்ட வேதநாயகம் பிள்ளை பெண் கல்வியின் தேவையை தன் படைப்புகளில் வலியுறுத்துகின்றார்.

**பெண்களின் அணி கல்வியே**

பெண்கள் தங்கம் முதலான அணிகளை அணிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் அழியாத, உண்மையானஇ உற்றுழி உதவக் கூடிய அணியாகத் திகழ்வது நல்லறிவே. எனவே, நல்லறிவை ஊட்டும் அணியாகத் திகழும் கல்வி பெண்களுக்குத் தேவை என்கிறார் (வேதநாயகம் பிள்ளை, நீதி நூல்:9:10:1).

**நல்லறிவு பெறல்**

பெண்களின் சிறந்த அணியாகத் திகழும் நல்லறிவைப் பெண்கள் பெறுவதற்கு அவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்பதை,

கல்லாத ஸ்திரீகள் விவேவகளாகயிருப்பது எவ்வளவு ஆச்சரியமென்றால், முடவர்கள் ஆடவும் குருடர்கள் அந்த ஆட்டத்தைப் பார்த்துச் சந்தோஷிக்கவும் ஊமைகள் பாடவும் செவிடர்கள் அந்தப் பாட்டைக் கேட்டு மகிழவுங் கண்டால் எவ்வளவு அதிசயமோ அவ்வளவு அதிசயந்தான் (வேதநாயகம் பிள்ளை, பெண் கல்வி, ப.3) எனவும்,

***எழுத்து வாசம் அறியதாவள் மட்டி***
***ஏதுமறியாளவன் சுரண்டுவாள் சட்டி***
***(வேதநாயகம் பிள்ளை, பெண்மதிமாலை, ப.2)***

எனவும் காட்டுகின்றார்.

கல்வியின்மையால் பெண்கள் ஆடவர்களால் இழிவாக நடத்தப் பெறுவதால், அவர்கள் சில நிலைகளில் உடைமைப் பொருள்கள்போல் காணப்படுகிறார்கள். அவர்கள் வாழ்க்கை உயர கல்வி தேவை என்பதை,

***படித்தால் மிருகம் போல் நாள் கழிப்போமோ?***
***(வேதநாயகம் பிள்ளை, பெண்மதி மாலை: புருஷர்களை வேண்டுதல், ப.8)***

எனப் பெண்களே புண்பட்டுக் கூறுவதாகக் காட்டுகின்றார்.

**முடிவுரை**

இவ்வாறு, பெண்களின் நலனில் அக்கறை கொண்ட வேதநாயகம் பிள்ளை பெண்கள் - ஆடவர்கள் ஆகிய இருபாலாரிடையே சமூக நியதிகளில் வேறுபாடின்மை காணப்பட்டால் தான் சமத்துவம் ஏற்படும் என்ற சிந்தனையை அன்றே வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் பெண்களுக்குக் கல்வியறிவு மூலம் பல நிலைகளிலும் மேம்பாடும், புகழும் பெருமையும் கிடைக்கும் என்பதையும் அவரது படைப்புகளின் வழி அறியலாகிறது.

**பார்வை நூல்கள்**

1. தேவதத்தா, பெண்ணியம்-ஒரு வரலாற்றுப் பார்வை, வள்ளுவர் பதிப்பகம், பாளையங்கோட்டை, 2001
2. பிரேமா.இரா, பெண்ணிய அணுகுமுறைகள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1999
3. சரளா இராச கோபாலன், தமிழ்த்தென்றலும் பெண்ணியமும், பாரி நிலையம், சென்னை, 2010.
4. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1998
5. மருதநாயம், ப.இ திருக்குறள் மூலமும் ஆய்வுரையும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2024
6. வேதநாயகம் பிள்ளை படைப்புகள், காவேரி பதிப்பகம், சென்னை, 2007